எண்: 139 / 2025 நாள்: 10/10/2025

# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

எண் 3, தேர்வாணையச் சாலை, சென்னை - 600 003.

## செய்தி வெளியீடு

ஒருங்கிணைந்த தொழில்நுட்ப பணிகளில் (பட்டயப்படிப்பு மற்றும் தொழிற்பயிற்சி நிலை) (அறிவிக்கை எண்: 10/2025) நேரடி நியமனத்திற்கான தேர்வுகள் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் 31.08.2025 அன்று மற்றும் 07.09.2025 முதல் 27.09.2025 வரை பல்வேறு நாட்களில் நடத்தப்பட்டன.

ஓ.எம்.ஆர் (OMR) வகைத் தேர்வாக 31.08.2025 அன்று நடைபெற்ற தமிழ் தகுதித் தேர்வு, திறனறிவு மற்றும் மனக்கணக்கு நுண்ணறிவு பாடத்திற்கான வினாத்தாள் மற்றும் அதற்கான தோராய விடைகள் தேர்வாணைய இணைய தளமான https://www.tnpsc.gov.in-ல் 30.09.2025 அன்று பதிவேற்றம் செய்யப்பட்டு தேர்வர்களிடமிருந்து முறையீடுகள் பெறப்பட்டன. அதனைத் தொடர்ந்து எஞ்சிய 46 பாடங்களில், கீழ்காணும் 22 பாடங்களுக்கான உத்தேச விடைகள் தேர்வாணைய இணைய தளமான https://www.tnpsc.gov.in-ல் இன்று பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன:

| |
|---|
| 1. Basic Designer and Virtual verifier (532)<br>அடிப்படை வடிவமைப்பாளர் மற்றும் மெய்நிகர் சரிபார்ப்பாளர் |
| 2. Electrical and Electronics Engineering (446)<br>மின்னியல் மற்றும் மிண்ணனுப் பொறியியல் |
| 3. Electronics Mechanics (535)<br>கம்மியர் மின்னணுவியல் |
| 4. Mechanic Motor Vehicle (437)<br>கம்மியர் மோட்டார் வாகனம் |
| 5. Rubber and Polymer Technology (576)<br>ரப்பர் மற்றும் பாலிமர் தொழில்நுட்பம் |

| |
|---|
| 6. Smartphone Technician cum App Tester (547)<br>திறன்பேசி தொழில்நுட்பவியலாளர் மற்றும் செயலி சோதனையாளர் |
| 7. Surveyor (387)<br>நில அளவையாளர் |
| 8. Workshop Calculation Science (540)<br>பணிமனை கணக்கீடு அறிவியல் |
| 9. Engineering Drawing and Draughtsman (Mechanical & Civil) (551)<br>பொறியாளர் வரைபடம் & வரைவாளர் (இயந்திரவியல் & அமைப்பியல்) |
| 10. Wireman (550)<br>கம்பியாள் |
| 11. Architectural Draughtsman (531)<br>கட்டடக்கலைவரைவாளர் |
| 12. Electrician (438)<br>மின்பணியாளர் |
| 13. Fitter (436)<br>பொருத்துநர் |
| 14. Industrial Robotics and Digital Manufacturing Technician (538)<br>தொழிற்துறை எந்திரவியல் & எண்ணியல் உற்பத்தி தொழில் நுட்பவியலாளர் |
| 15. Sewing Technology (546)<br>தையல் தொழில்நுட்பம் |
| 16. Advance CNC Machining Technician (534)<br>மேம்படுத்தப்பட்ட கணினி எண் கட்டுப்பாடு இயந்திர தொழில்நுட்பவியலாளர் |
| 17. Civil and Mining Engineering (574)<br>அமைப்பியல் மற்றும் சுரங்கப் பொறியியல் |
| 18. Machinist (539)<br>இயந்திர வேலையாள் |
| 19. Mechanic Refrigeration and Air Conditioner Technician (435)<br>கம்மியர் குளிர்பதனம் மற்றும் தட்பவெப்பவியல் கட்டுப்படுத்தும் தொழில்நுட்பவியலாளர் |
| 20. Technician Medical Electronics (549)<br>மருத்துவ மின்னணுவியல் நுட்பவியலாளர் |
| 21. Turner, Tool and Die Maker (552)<br>கடைசலர், கருவி மற்றும் டை மேக்கர் |
| 22. Textile Mechatronics (568)<br>துணிநூல் இயந்திர மின்னணுவியல் |

மேற்குறிப்பிடப்பட்டுள்ள 22 பாடங்களின் உத்தேச விடைகளின் மீது முறையீடு செய்ய விரும்பும் தேர்வர்கள் உத்தேச விடைகள் வெளியிடப்பட்ட நாளிலிருந்து ஏழு நாட்களுக்குள் அதாவது 17.10.2025 அன்று மாலை 5.45 மணிக்குள் தேர்வாணைய இணைய தளத்தில் உள்ள தேர்வுப்பலகையின் (Exam Dashboard) கீழ் “Answer key Challenge” என்ற சாளரத்தைப் பயன்படுத்தி மட்டுமே முறையீடு செய்யலாம். இதற்கான அறிவுரைகள் வழிமுறைகள் தேர்வாணைய இணைய தளத்திலேயே வழங்கப்பட்டுள்ளன. அஞ்சல் வழியாகவும் மின்னஞ்சல் வழியாகவும் பெறப்படும் முறையீடுகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

இதர பாடங்களுக்கான, உத்தேச வினா விடைகள் விரைவில் வெளியிடப்படும்.

அ. சண்முகசுந்தரம், இ.ஆ.ப
தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர்